Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III. TIRUPATTUR
Case No CC .NO. 166/2019
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS (PW) No.4 , Page.No.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. சிவக்குமார் | **தொழில்** | தலைமை மருத்துவர் |
| **த/க பெயர்** | திரு. தங்கவேல் | **கிராமம்/ ஊர்** | |
| **வயது** | 52 | **மாவட்டம்** | திருப்பத்தூர் |

| | |
|---|---|
| எதிரி ஆஜர் | 1,2 |
| எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது | 3,4 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 27th day of November 2025

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பத்தூர் மாவட்ட தலைமை மருத்துவமயையில் தலைமை மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 01.02.2019 அன்று காலை 10.10 மணியளவில் இதே மருத்துவமனையில் நான் பணியில் இருந்தபோது ரங்கசாமி 72 வயது ஆண் நபரை அவரது உறவினர் சென்னப்பன் என்பவர் அவருடைய காயத்திற்கு சிகிச்சைக்காக அழைத்து வந்திருந்தார். அவரை விசாரித்தபோது, அதே தினத்தில் காலை 07.30 மணியளவில் தெரிந்த 1 ஆண் மற்றும் 1 பெண் நபர்கள் அவரது வீட்டில் வைத்து உருட்டு கட்டையால் தாக்கியதற்கு சிகிச்சைக்காக வந்ததாக கூறினார். அவரை பரிசோதித்தபோது, கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. வலது கையில் வலி மற்றும் வீக்கம்
2. இரண்டு கால் முட்டிகளிலும் 3x3 செமீ சிராய்ப்பு காயம்

எலும்பு மருத்துவரின் கருத்தின் அடிப்படையில் அவரது கையில் 2,3,4 வது விரல்களில் எலும்பு முறிவு காணப்பட்டது . அதன் அடிப்படையில் காயம் 1 கொடுங்காயம் என்றும், காயம் 2 சாதராண காயம் என்றும் சான்று வழங்கினேன். **அந்த காயச்சான்றிதழ் அ.சாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

காயம்பட்ட நபர் வீட்டிற்கு உள்ளே சம்பவம் நடந்ததாக எனது விசாரணையில் தெரிவித்துள்ளாரா என்றால் வீட்டில் நடந்ததாக தெரிவித்தார். 1 ஆண் மற்றும் 1பெண் நபர் மட்டுமே தாக்கியதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். பொதுவாக கரடுமுரடான பாதையில் கால் இடறி கீழே விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். பள்ளமான பகுதியில் விழுந்தாலும் எலும்பு முறிவு ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Signature of Witness — Judicial Magistrate No.III(FAC)
Tirupathur.